721

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 துருதலம், மாம்பாக்கம்; செய, ஆனி. கஅ 2-7-54 தளிர்-37

OF THE REGISTRAR O

## இயற்கையும்-இறைவனும்

"உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்
கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கும்
மிழலையாமே."

(சம்பந்தர்)

இயற்கை வனப்பையும், வளங்களையும் மிக அழகாக வருணிப்பதில் திருஞான சம்பந்தர் பேராற்றல் வாய்ந்தவர். ஆங்கிலத்திலுள்ள வோர்ட்ஸ்வொர்த் (**Wordsworth**) முதலிய கவிகளின் இயற்கைப் பாடல்களைவிட இவர் பாடல்கள் மிகுந்த சுவையுடையன. சமணர்கள் புலன்களை அடக்கும் வழியென்றெண்ணி இயற்கை வனப்பையும், வளங்களையும் நுகர்தலாகாதென்ற கொள்கையுடையவர்கள். இக்கொள்கை சைவர்கட்கு உடன்பாடன்று. ஐம்புலன்களையும், அவை செல்லும் வழியில் விடாது, மடைமாற்றிக் கடவுள் திருவருள் நெறியிற் செலுத்தி, இயற்கையின் வனப்பை திருவருளிருப்பிடமாகக் கண்டு நுகர்வதே சைவ ஒழுக்கம். முதல் திருமுறையில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ள எழுத்தோவியங்கள் சிறப்புத்தான் என்னே! அங்கம் பூம்பாவையின் பேரழகைத் திருஞானசம்பந்தர் கண்டதை "கண்ணுதற் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்" என்றார் சேக்கிழார். கருணை வெள்ளமாக இயற்கையைக் காண வேண்டுமென்பது அவரது உள்ளக்கிடக்கை.

நமது மனத்தை இயற்கை வழியில் ஈர்த்துக் கடவுள் திருவடியில் நம்மை ஈடுபடுத்துவதே தேவாரத்தின் தன்மை. நையாத மனத்தவரை நைவித்தற்கும், ஆணவத்தைப் போக்கி நல்வாழ்வைத் தருவதற்கும், தேவாரம் ஒரு சிறந்த கருவி. தேவாரத்தை,

"மனமகிழ் வொடுபயில் பவரெழின் மலர்மகள் கலைமகள் சயமகள்—இனமலி புகழ்மக ளிசைதா திருநில னிடையினி தமர்வரே"

'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

**ஆயுள்—**

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| மலர் | | மலர் |
|---|---|---|
| மலர் 6 | செய, ஆனி, 2-7-54 வெள்ளி. | தளிர் 37 |


## நம் கடமை

கடவுட் கொள்கை நிரம்பியது நம் நாடு. இதனுள் "மாதவஞ் செய்த தென்றிசை" என்பது நந்தம் தமிழ் நாடு.

தமிழும், சைவமும், திருமுறைப் பெருமையும் விளங்கி நன்மை தருவதற்குரிய நல்ல காலம் தற்போது தோன்றி வளர்ந்து வருகின்றது.

தக்க ஆசிரியர்களின் சூழலில் ஆங்காங்கேயுள்ள கோயில்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இயன்ற வகையில் சைவப் பணியும், தமிழ்ப் பணியும் செய்யமுற்பட்டு விட்டனர் தமிழ்ச் சைவப் பெருமக்கள். கோயில்கள் எங்கும் சமய அறிவினைப் பரப்புந் திருவிழாக்கள் போட்டியிட்டுக் கொண்டு நடைபெறுகின்றன. வாண வேடிக்கை, சதிர், பாட்டு, ஆட்டம் முதலிய வறிய அமைப்புக்கள் சிறிது சிறிதாக மறைந்து விட்டன. நூல் நிலையங்களும் திருக்கோயில்களில் தலை நீட்ட முற்பட்டிருக்கின்றது என்றால், கோயில்கள் ஞானம் பரப்பும் இடங்கள் என்பதில் ஐயமுண்டோ.

தமிழ் தனிமொழி; நிரம்பிய இலக்கண வரம்புடைய மொழி; தூய மொழி; பழைய மொழி; தெய்வ மொழி; தெய்வத்தால் வளர்க்கப்பட்ட மொழி; தெய்வத்தைக்காட்டும் மொழி; அதனை 'ஞானபளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' எனச் சேக்கிழாரும் "நீண்ட தமிழாலுலகை நேமியினளந்தான்" எனக் கம்பரும் போற்றினர். எல்லாவற்றுக்கும் மேலாய் 'இறைவனுக்கு ஆளாக்கும் நெறியில் மக்களைச் செலுத்த வல்ல மொழி' என்றார் அப்பாடிகளார். அதுவே தமிழின் சிறப்பிலக்கணமாம்.

மொகஞ்சொதரோ முதலிய சிந்து வெளியில் கண்டு பிடித்த செய்திகளால் 6000 ஆண்டுகட்கு முன்னரே ஆளுடைய நம்பிகள் தேவாரங்களுக்குரிய திருவடிவங்கள் அங்கு காணப்பட்டன என்பது அறியக் கிடப்பதாம். இறைவன் ஒருவன் உண்டு. அவனால் அருள்செய்யப்பெறும்உயிர்களும் உண்டு. அந்த உயிர்களைப் பிணிக்கும் பாசமாகியநோயும் உண்டு. அந்த நோயினைத் தீர்க்கவே இறைவன் உயிர்கட்கு உடம்பு, கரணம், முதலியவற்றையும் உலக இன்பங்களையும் தருகின்றான். இன்பத்திற் கிருப்பிடமான இறைவனை இன்னின்ன வகையால் உணர்ந்து அடைந்தால் இன்ன பயன் பெறலாம் என்பபதை எடுத்துரைப்பன மெய்கண்ட சாத்திரங்கள். முன்னே குறித்தபடி உலகத்தையும், உயிர்களையும், அருள் புரியும் இறைவனையும் அளந்து நிச்சயிப்பது தமிழ் என்றால் அது இவையேயாம்.

சைவத் திருமுறைகள் இலக்கண வகையாகக் கூறப்படும் இறைவன், உயிர், உலகு என்ற மூன்றினையும் இலக்கியவகையால் அனுபவத்தில் காட்டுவனவாம். அவை திருஞானசம்பந்த நாயனார் அருளிய தேவாரங்கள் முதல் பெரிய புராணம் ஈறாகப் பன்னிரெண்டாகப்பெரியோர்கள் வகுத்திருக்கின்றனர். அவையே திருமுறைகள் என்று கூறுவது உயர்ந்தோர் மரபு. இந்தப் பன்னிரெண்டினையும் திருஞானசம்பந்த நாயனார் முதல் சேக்கிழார் நாயனார் வரையுள்ள இருபத்தேழு ஆசிரியர்கள் அருளினர். அவருள்ளே திருவாலவாயுடைய பெருமானும் ஒருவர். அவர் நேரே பாடியருளியது பதினோராந் திருமுறையின் முதற்பாட்டாகிய 'மதிமலி புரிசை' என்பது. ஏனைய திருமுறைகளை அருளிய இருபத்தறுவரும் தாமாக அவற்றைச் செய்யாமல் திருவருளில் மூழ்கித் திளைத்து நின்று, தம்மை மறந்து இறைவனையே நினைந்துருகிப் பாடினர். ஆதலின், அவையே அருட்பாக்கள் என்க. அவை அருளால் பாடப்பட்டதாதலினாலே அருளைத் தேடித்தரத் தக்கவையாம்.

உலக நிலையின்பங்கள் எல்லாம் தரவல்ல இத் திருமுறைகள் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன் பாடப் பெற்று அப்போது என்ன பயன் விளைத்தனவோ! அந்தப் பயனை இன்றும் அவரவர் பக்குவத்திற்கேற்ப தந்து கொண்டேயிருக்கின்றன.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# இனிய பொழுது

—2—

நா. சுப்பிரமணியன்.

இன்று வெள்ளிக்கிழமை. வீடே சுறுசுறுப்பாக இருக்கிறது. என் உள்ளமும் மகிழ்ச்சியால் நிறைந்து துளும்பி வழிகிறது. இரவு உணவுக்குப் பின் வழக்கம்போல் என் தாயுடனும் தமையனாருடனும் பேசிக்கொண்டிருந்தேன். எங்கள் பேச்சு குரங்கினைப்போல் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் தாவிச் சென்று கொண்டிருந்தது. முடிவில், நான் அம்பலவன் திருக்கூத்தின் உண்மைகளை மேலும் விளக்கவேண்டுமென்று கேட்டவுடனே, என் அன்னையார் தம்பி! எல்லாம் வல்ல இறைவனாகிய திருச்சிற்றம்பலவன் ஓவியத்தில் நின்று காட்சியளிக்க உளங் கொள்கின்றான். நம்முன்னே ஓவியம் நிற்கிறது. ஓவியத்தில் கூத்து! கூத்தில் ஓவியம். கூத்தப் பெருமான் திருக்கோலத்தில் தில்லைத் திருக்கோலமும், திருவாலங்காட்டின் பெருந்திருக் கோலமும் உள்ளத்தை, உயிரை ஈர்ப்பனவாம். திருவாலங்காட்டில் ஆடற்பெருமான் தூக்கிய கால் வானோக்கி நிற்கிறது ஆனால், தில்லையிலோ அவனது கால் எடுத்த பொற்பாதமாகவே—குஞ்சிதபாதமாகவே இருக்கிறது. திருவாலங்காட்டில் அப்பெருமான் அருளுவது ஊர்த்துவ தாண்டவம். ஐயனது திருக்கூத்தை ஆறஅமர அருகிருந்து பார்த்து மகிழ்ந்த நந்தம் காரைக்காலம்மையார்,

'அடிபேரிற் பாதாளம் பேரும்
அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்-கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள்
பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு'

என்று அனுபவத்தால் கூறியதை மனத்துள் கொள்ள வேண்டும் என்று கூறினார். அதுவரையில் அமைதியாகக் கேட்டுவந்த என் அண்ணனார்.

ஆலங்காட்டு ஐயன் அருகில் அன்பான என்புப் பெண் மட்டுமல்ல; எதிரிலே எவரும் அஞ்சும்படியான உருவமுடைய பெண்ணுருவமும் இருக்கின்றது. அதன் தலைமயிர் பாம்பு; கண்களில் தழல், வாயெல்லாம் இரத்தச்சேறு; உடலில் படமெடுத்த பாம்பணி; பூதம் போன்ற வயிறு; கை கால்களில் கூறிய நீண்ட வாள், நகங்கள். அப்பப்ப என்ன கோரம் இவ்வுருவே காளி என்று சொல்லப் படுகிறது இக்காளியுடன் தான் ஈசன் வாது நடம் புரிகின்றான் என்று புராணங்கள் பல பேசும் என, அது இருக்கட்டும் பெரிய தம்பி! காளிரூபம் எதற்கு அறிகுறி? என்று கேட்டனர் என தன்னையார்.

தொடர்ந்த தமையனார் கொள்ளை, கொலை, போர் முதலிய அஞ்சத்தக்க இரத்தப்புரட்சிக்கு (Bloody Revolution) அறிகுறி. தில்லையில் அப்பன் புரிவது ஆனந்த நடனம் அங்கே அவன் அருகில் நிற்பது உள்ளக் கிழியில் இன்பமாகப் பதியும் அழகோவியம்—பெண்ணோவியம். அவ்வோவிடம் தன்னைச் சிவகாமி என்று கூறிக்கொள்வதுபோல் இருக்கிறது அம்மை ஐயனைக் காதலிக்கிறாள் ஐயன் அம்மையை நோக்குகிறான் நோக்கின் பொருள் யாது என்றால், கருவில் கட்டுண்டு கிடக்கும் உயிர்களை யெல்லாம் ஈடேற்றல் வேண்டும் என்னும் அம்மையின் காதல் நோக்கும், உன் காதல் நிறைவேற உன்னருளும் வேண்டும் என்னும் ஐயன் நோக்குமாம். இருளில் இருந்த உயிர்கள் தனு கரண புவன போகங்களைப் பெற்று விழிப்படையவே அப்பன் நோக்கம் அம்மையின் காதலில் ஒன்றி ஆனந்தத் தாண்டவம் ஆயிற்று. எனவே, தில்லைச் சிவகாமி படைப்பு முதலிய தொழில் நிகழ்ச்சிகளுக்கு (Evolution) அறிகுறியாம். என்று கூறிப் பேசாதிருந்தனர். உள்ளம் நெகிழ்ந்த நான்

"தென்பா லுகந்தாடுந்
தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான்
பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற்
பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண்
சாழலோ"

என்னும் சிவனுடைய காருண்யத்தை விளக்கும் திருவாசகத்தை உள்ளமும் ஊனும் உருக என்னையும் மறந்து குழைந்து பாடினேன்.

உயிர்கள் தங்களுக்கு தனு முதலிய வாழ்வின்பங்களை வழங்கிய அம்மையப்பனை மறவாது நினைந்து நினைந்து அவன் அருட்கொடை விளங்கப் பெண் ஆணுடனும், ஆண் பெண்ணுடனும் வாழ்ந்து அறவழி நின்று ஒழுகின் உயிர்கள் முழு விடுதலை அடையும். இதை எண்ணாத உயிர்கள் ஆணவத்தால் செருக்கி, நேயம் இழந்து வாழ்வதனால் உலகில் கொள்ளை, கொலை, போர், புரட்சி தோன்றுகின்றன. இவைகட்கெல்லாம் அடிப்படை இறைவன் அருட் கொடையை உயிர்கள் மறந்தமையேயாகும் என்று சொல்லிப் பெருமூச் செறிந்தனர்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# இருமை

அ.ரா. ஜெயபாலன்.

இரவு மணி 10. என் மனம் என்னையறியாது துன்பக் கடலில் ஆழ்ந்து தத்தளித்து வருந்தியது. நானும் நினைத்துப் பார்த்தேன். நேற்று இரவு இல்லாத இந்தக் கவலை இன்று எப்படித் தோன்றியது? கடந்த இரவு எவ்வளவு மகிழ்ச்சியோடிருந்தேன்! ஆனல் இன்று......?வாழ்க்கையில் ஏன் இந்த வேற்றுமை? வாழ் நாட்களில் இன்பம் சிறிது காலம் துன்பம் சிறிது காலம்! இது ஏன்? வாழ்க்கையே ஒரு புரிந்து கொள்ள முடியாத புதிராகஇருப்பது ஏன்? இவ்வாறு மட்டுமல்ல ஒரு நாளில பாதியை ஒளியடைகிறது! மற்றைய பாதியை இருள் ஆட்சி செய்வது ஏன்? அது மட்டுமல்ல, இனியும் உறக்கம் விழிப்பு, சிரித்தல், அழுகை இருத்தல்–போதல், நன்மை–தீமை, உண்மை-பொய் இவ்வாறு வளர்ந்து கொண்டே போகும் இந்த இருமை ஏன்? இது போன்று சிந்தித்துக் கொண்டே இருந்தது என் மனம். ஆனல் பதில்தான் இல்லை இந்த இருமை இலலாத வாழ்வும உலகமும் இருக்கக் கூடாதா என ஏங்கினேன்.

எவனே ஒருவன் என் எதிரில் நிற்பது போன்று தெரிந்தது! ஆனல், அந்த உருவமும் என்னையே நூறு பங்கும் ஒத்திருந்தது. ஆனல் அவன் முகததில் சந்தோஷமோ அன்றிக்கவலையோ இல்லாத ஒருவகை அமைதி நிலவியது. அவன் என்னை அணுகி, "தம்பி நீ யார்?" என்றான் புன்முறுவலுடன்.

நான் யார்? என்று என்னையே ஒரு முறை கேட்டுக் கொண்டேன். பிறகு அவன் கேள்விக்குப் பதிலாக, "ஐடா நான் யார்? என்பது என்னல் சொல்ல முடியவில்லை. என் மனம் அவ்வளவு குழம்பி யுள்ளது இப்போது. ஆகவே, தாங்கள் என்னை நாடி வந்தும் உமக்கு முகமன் கூறி உபசரியாமைக்கு மன்னிக்கவும்" என்றேன். "தம்பி! உன் மனக் குழப்பத்தை என்னவென்று நானும் அறியலாமோ?" "சொல்லுகிறேன்............ பதில் சொல்வீர்களோ?"

"எதுவே யாயினும் எனக்குத் தெரிந்தது சொல்லுவேன்."

அப்படியானல், வாழ்வில் இன்பம் துன்பம் இவை உண்டாவதேன்? இது இல்லாத உலகமே இராதா? இன்பம் யாவராலும் விரும்பப்படுவதாக இருந்தும் துன்பம் தொடர்வதற்குக் காரணம் யாது? வாழ்வில் இவை கலந்தும் மாறியும் வருவானேன்?

(ஒரு கேலிச் சிரிப்பு! ஆனல், அதில் எவ்வளவோ எண்ணங்கள் அடங்கி இருந்தன.)

"தம்பி உலகம் இன்னது என்று அறியாதவன் நீ. ஆகவே இக் கேள்வி கேட்டாய் இவ்வுலகம் தனிப் பொருள் அல்லவே! இன்பம் துன்பம்.......... போன்ற நீ கேட்ட பல கூட்டுப் பொருள்களால் ஆகியது. இன்பம் இன்றேல் துன்பமும், துன்பம் இன்றேல் இன்பமும் எவ்வாறு தோன்ற முடியும்? இன்பமும் துன்பமும் அற்ற வாழ்க்கையும் உலகமும் கிடையாது. இப் பொழுதும் இல்லை! இனியும் இருகக முடியாது! கற்பனைதான் செய்யலாம். தவிர, ஒளியில்தான் நிழல் தெரியும். இருளிலும் இருட்டிலும் நிழலைக்காண முடியுமா? இன்னும் இரவில்தான், இருளில்தான் விளக்கொளி பிரகாசிக்கும். அது போலவே ஒருவன் வாழ்க்கையில் பற்பல துன்பங்களை அனுபவித்தால்தான் அவனுக்கு இன்பம் இன்ன தன்மையுடையது என்பதை அறிய முடியும் அவ்வாறே இன்பத்தில் திளைத்தவன்தான் துன்பம் இத் தன்மையது என்பதை அறிய முடியும். இதை நீ அனுபவத்தில் கண்டிருக்கலாம்; காணலாம."

இந்த விளங்காத புதிரான இருமை இல்லாவிட்டால் என்ன? இது இருந்துதான் தீர வேண்டுமா?"

உருவம் வாய்விட்டுச் சிரித்து, "தம்பி! இந்த இருமை இலலாத வாழ்வே இல்லையே! ஒன்றுகிய உலகம் இல்லையே. இந்த இருமை இல்லாத நீ மட்டும் எப்படி வாழ முடியும்? இருமை இன்றேல இவ்வுலகமே தேவையில்லையே! வாழ்வும் தேவையானதல்லவே! மேலும், நாள் முழுவதும் உழைத்த மனிதன் ஓய்வு கொள்ள இரவும் தூக்கமும் அவசியமானதல்லவா? இனி அவ்வாறன்றி பகலாகவே இருந்தால் உழைத்துக் கொண்டே இருத்தலும் இரவாக இருந்தால் உறங்கிக் கொண்டே இருத்தலும் வாழ்க்கையாகுமா? இவ்விதமாகவேதான் இன்பத்தில் மட்டும் திளைத்தவன் கதியும், துன்பத்தில் மட்டும் ஆழ்ந்தவன் கதியும ஆகும். மேலும, துன்பத்திலாழ்ந்துள்ள ஒருவன் தனக்கில்லாத பலவற்றுள் ஏதேனும் ஒன்று தற்செயலாகக் கிடைத்தாலும் அதை அடைந்த இன்பம் அவனல் யாக்கை உள்ளமட்டும் மறவான். இருளில் வழியறியாது திகைப்பவன் மின்னல் ஒளியால் வழியை எவ்வாறு அறிந்து சந்தோஷம் அடைவானே அது போலவே மேலே கூறப்பட்டவன் தானடைந்த அனுபவத்தை

மின்னல் போன்று தோன்றி மறைந்ததாயினும் எண்ணி மனம் மகிழ்வானல்லவா? இவ்வாறு தான் இன்பத்தில் திளைத்தவனும் துன்பத்தை அறிவான். இது போலவே நன்மை தீமையையும் இருள் வெளிச்சத்தையும் துக்கம்–சந்தோஷத்தையும், வெயில் நிழலையும் மாறி மாறி உண்டாக்கும் தன்மைகளையுடையது என்பதை அறிந்து கொள்."

"ஆமாம் இந்த இருமை இல்லாத உலகம் இல்லை என்கிறீர்கள். அப்படியானால் உயிர், உலகம் இது சம்பந்தமான இருமைகளுக்குக் காரணம் யாது? அல்லதுயார்?"

"அர்த்தம் நிறைந்த அவசியமான கேள்விதான். தம்பி! நீ கேட்ட கேள்வியின் சுருக்கமான பதில் உயிர், உலகம், வினை இவைகளுக்குக் காரணம் கடவுள்தான்."

'என்ன! கடவுளா? இக்காலம்தான் கடவுள் இல்லை என்னும் காலம் என்பதை நீர் அறியீர் போலும்! சரி. கடவுள் காரணம் என்று பொட்டையாகக் கூறி நிறுத்திக்கொண்டால் எனக்கு பதில் சொல்லிவிட்டதாக எண்ணுகி[illegible]ள் கடவுள் என்றால் என்ன?"

"அப்படிக் கேள்! தம்பி! கடவுள் உயர்திணையும் அஃறிணையும் அல்ல! ஆணும் பெண்ணும் அல்ல! ஒன்றும் பலவும் அல்ல! இங்கும் அங்கும் எங்கும் நிறைந்தவன்! ஆனால், இங்குமங்குமெங்குமில்லாதவன்! உருவமும் உண்டு! ஆனால் அரூபியானவன். மேலும் ஒற்றுமையும் வேற்றுமையும் அற்றவன்! உயிர்களின் மனோ வாக்கு காயங்களுக்கும் அப்பாற்பட்டவன். உயிர்களில் சிறந்த மானிடப் பிறவிக்குத்தான் பகுத்தறிவு இருக்கின்றது. அப்பகுத்தறிவின் மூலம் மனதில் கற்பனை செய்கின்றான் மனிதன்! அப்படிப்பட்ட கற்பனைக்கும் கூட எட்டாதவன் கடவுள்! அவனது இப்படிப்பட்ட பிரதாபங்களை எழுதியும் சொல்லியும் முடியாது. நம்மால் அவனை ஸ்பரிசிக்க முடியாது. காணமுடியாது கண்டாலும் சொல்லவும் முடியாது. மண், விண், காற்று, நீர், தீ ஆகியவைகட்கும் அப்பாற்பட்டவன். மேலும் அவைகளுக்கு நாயகன். ஐம்புலன்களும் அவனே. ஆக்கலும் அளித்தலும், அழித்தலும் அவனே. (இதை பகவத்கீதையில் விபூதி யோகத்தில் கண்டு அறிவாய்) அவனது இலக்கணம் எழுத முடியாதது. பேசவரையறையற்றது. திணை-பால்-எண்-இடம்-வேற்றுமை இவற்றிற்கு அடங்காதவனும், மனம் வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்டவனும், ஐம்புலன்களாலும் அறியமாட்டாதவனும், கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்களுக்கும் காற்று, தண்ணீர், உஷ்ணம், ஆகாரம் முதலியன கொடுப்பவனும்தான் கடவுள்."

"இரண்டு குளம் பாழ் ஒன்றில் தண்ணீர் இல்லை! ஆனால் மொத்தம் மூன்று குளங்கள் என்று சொல்லுவதுபோல் இருக்கின்றதே உங்கள் கடவுள் இயல். ஒரே புதிர் மயமாக இருக்கும் இக் கடவுளை நான் எப்படியறிந்து கொள்வது?"

"தம்பி! கடவுளின் இயல் மட்டும் புதிர் அன்று! இன்னும் மறுபிறவி, பழவினை மோட்சம், நரகம் இவைகளும் கூடப் புதிர்தான்! இவற்றைப்பற்றி பல் வேறுமதங்கள் [illegible] விளக்குகின்றன. நீ இந்த விவாதத்தில் இறங்கிவிடாதே! இதில் உனது காலம், பொருள், அறிவு முதலியவைகள் பாழாகும். நம் போன்றவர் உய்யவேண்டி இயற்றிய குறள்–கீதை போன்ற வேதங்களை உணர்ந்து அதன்படி நட. அதுவே புருஷார்த்தம் ஆகும். நீ நல்லவைகளைச் செய்ய வேண்டாம். அது போலவே தீயவைகளைச் செய்யாதிருந்தால் மதனில் தேவனாவாய் என்பதைத் தெரிந்து கொள். புருஷார்த்தத்தின்படி நீ நடந்துகொள்வாயானால் நீ பரப்பிரமத்தின் இயலைக் காண்பாய் என்பது திண்ணம்!"

"ஐயா! தங்கள் பேச்சிலிருந்து எனக்கிருந்த பல ஐயங்கள் நீங்கிவிட்டன. தங்கட்கு எவ்வகையில் நன்றி செலுத்துவேன்."

பதில் இல்லை........அந்த உருவமும் காணோம்.

"ஐயா! ஐயா! எங்கே சென்றீர்கள்."

"சேகர்! சேகர், என்ன, என்ன! ஏதாவது கனவு கண்டீர்களா? ஏதேதோ பிதற்றுகிறீர்களே" என என் விடுதித் தோழன் இளங்கோ எழுப்ப எழுந்தேன். ஆ! இதுவரை கண்டது கனவு தானா? நல்ல கனவு ஐயங்களைப் போக்கும் கனவு அன்றாடம் நிகழ்ந்துகொண்டிருந்தால் கல்லூரி மாணவர்கட்கும் பிறருக்கும் எவ்வளவோ நலமல்லவா? என்று எண்ணிக்கொண்டிருக்கும் போதே "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார், பெருமை பிறங்கிற் றுலகு" என்னும் திருக்குறளை மனனம் செய்துகொண்டே அறையில் நுழைந்தான் [illegible].

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இது காரணம் இறைவனின்
அருள் திறத்தை எண்ணிச் செய
லிழந்த என தன்னையார் தம்பி!
உலகம் போராட்டத்துக்கு
இறையானால் எப்படி வாழும்?
போராட்டம் நிகழ்கம்
தாய் சிவகாமி விடமாட்டாள்.
அவள் சக்தி உலகத்தை வளர்ப்
பது. உலகம் அழிந்து பட்டால்
இறைவனுக்கு- அவன் கூத்துக்கு-
அவன் அருட்சக்திக்கு என்ன
வேலை, உலகுக்கு நல்லறிவு
கொளுத்த ஒரு சிறிது போரும்,
புரட்சியும் இயற்கைச் சக்தியால்
உண்டாக்கப்படும். அந்த இரத்
தப்புரட்சிக்கு அறிகுறியேபெரிய
தம்பி சொன்ன காளி உரு
வம் என்று வீறுடன் கூறினார்
கள்.

இருவர் உரையிலும் ஒங்கிய
நான் என் அண்ணனாரை நோக்க,
அவர் தம்பி! கோணலாகச் செல்
லும் உலகில் மாறுபாட்டை உண்
டாக்குவது அக்காளியின் கடமை
அதுவும் உலகத் திருத்தத்தின்
பொருட்டே. குறிப்பிட்ட அள
வுக்கும் மீறி சக்தியின் ஒருகூறுய
அக்காளி முனைவாளேல் உயரத்
தூக்கியுள்ள இறையின் திருவடி
வாளா இராது. அவள் தலையின்
மீது விழுந்து நசுக்கி வேகத்தை
ஒடுக்கும். அது குறித்தேதான்
ஆலங்காட்டு ஆடும் ஓவியம் "காளி!
அறத்தை மறந்து உலகம் பாழ்
பட்டுப் போகும் காலத்து அவ்
வுலகத்தினை ஒழுங்கு படுத்த உன்
கடமையை நீ செய்யலாம். அது
வும் குறிப்பிட்ட அளவுக்கு மேல்
இருத்தல் கூடாது. வரம்பு மீறி
தலைவிரித்தாட நீ முனைவையேல்
இவ்வூர்த்துவ பாதம் உன்னை
மிதித்து அடக்கத்தயாராய் இருக்
கும் வழிப்பாயிரு" என்று அறி
வுறுத்துவது போன்று இருக்கின்
றது. ஆதலால், அன்பும் அறிவும்
உடையாய்! காளியின் எழுச்சி

# நன்றே தோழி நம் கணவன் வாழ்வே

K. அமுதாம்பிகை.

(முன் தொடர்ச்சி

உன் உள்ளக் கருத்தை உள்ள
வாறே உரைப்பாயாக' என்று
கேட்டனள். உடனே
தோழிக்குத்தன் உள்ள நிலையைத்
தலைவி தெள்ளிதில் எடுத்து
விளக்குகின்றாள்.

அன்புருவான தோழி! யான்
கூறுவதை விரும்பிக்கேள்.
பிறந்த வீட்டின் பெருமையைப்
பேசும் பேதையென்று என்னைப்
பிறழ உணர வேண்டாம் செங்
கோலைச் செலுத்தும் மன்னவன்
உழவனாக நின்று பனைமரத்தினை
நுகத்தடியாகக் கொண்டு, யானை
களைக் காளைகளாகப் பூட்டி ஏரை
உழுது, வெண் பொன்னை விதைக்
கப் பின்னர் அவை செம்பொன்
னாக விளையும் சிறப்பினையுடையதா

யால் பழுதற்ற உலகத்தை
செம்மைப் படுத்த
இறைவனது அருட் சக்தி முன்
னிற்கும். எனவே, அப்பனின்
கருணை நோக்கும் அம்மையின்
காதல் நோக்கும் இல்லையேல்....?
என்று மேலே கூறுது வாளா
விருந்தபோது, அன்னையார்

'தேன்புக்க தண்பணைசூழ்
தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம்
பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம்
பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்
கூட்டாங்காண் சாழலோ'

என்று என்புங் குழையுந் திருவா
சகப்பாட்டினைக்கனிந்துபாடினர்.

மகிழ்ச்சிக் கடலில் ஆடியநான்
பெருங் கூத்துப் பெருமானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா
நாளேஎன்று கூறி இன்றைய
நல் பொழுதை வாழ்த்தி உறங்
கச் சென்றேன்.

யினும்யான்பிறந்த வீட்டின் இன்
பத்தைப் பெரிதென்று விரும்ப
மாட்டேன். யான் புகுந்த வீட்
டின் பசுமையான வரகுக் கதிர்
களைக் கொய்து கொண்டு வந்து,
அவற்றை மாடுகள் தின்
னுகபடி பார்த்து, மனைக்கருகே
யிருக்கும் பாறையில் உலரவைத்
துக் குற்றிப் பதர்களைக் களைந்த
பின்னர், முன்னர் இரவலாக
வாங்கியவர்க்குரிய பகுதியைக்
கொடுத்து எஞ்சிய அரிசியை
எடுத்து, காட்டிற்குச் சென்று
விறகை வெட்டிக்கொண்டுவந்து,
உணவாக்கிக் கறியமுதுக்குக்
குப்பைக் கீரையை உப்பையும்
இடாது வேகவைத்து, அதனை
உண்ணுதற்குரிய உண்கலமில்லா
மையால் அடுத்த வீட்டுக்குச்
சென்று பிறனுள்ள கலமொன்று
பெற்றுவந்து, அதன் கண்ணுள்ள
துளைகளைச் சோற்றினா
லடைத்து, அப் புல்லிய உண
வையும் ஒரு காளைவிட்டு ஒரு
நாளைக்கு உண்டு வாழும்
வறிய நிலையிலிருப்பினும்,
என் காதற் கணவனிடத்தில்
இருந்து வாழும் வாழ்க்கையே
எனக்குப் பேரின்பத்தை விளைக்
கும் நல் வாழ்க்கையாகும்.' என்
றனள்.

இக்கருத்தமைந்த பாடல்
பின் வருமாறு:—

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

"இராமழை பெய்த
விராவுச் சாத்துச்
செங்கோல் வேந்தன்
உழவனாகிப்
பனை நுகங் கொண்டு
யானையேர் பூட்டி
வெள்ளி விதைக்கப்
பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத்
தீண்டிய வாழ்வே
செங்காய் வரகுப்
பசுங்கதிர் கொய்து
கன்று பார்த்துக்
குன்றின் உணக்கி
ஊடுபதர் போக்கி
முன் உதவினோர்க் குதவி
காடுகளை ஆந்தனம்
பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை
உப்பின்றி வெந்ததை
இரவில் சாவம்
பரிவுடன் வாங்கிச்
சோறு கொண்டு
பீறல் அடைத்தே
ஒன்று விட் டொருபொழுது
தின்றே கிடப்பினும்
நன்றேதோழி
நம் கணவன் வாழ்வே"

தன் மகள் இன்னுயிர்த்தோழியிடம் இங்ஙனம் கூறக் கேட்ட செவிலித்தாய் அடைந்த வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையேயில்லை. இத்தகைய பெண்மணிகள் நடத்திய இல்லறம் எத்துணை மாட்சிமை யுற்று விளங்கியிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? கற்பிற் சிறந்த அம்மாதரசிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றிப் பெண்ணுலகம் பெருமை பெறுமாக.

"தற்காத்துத் தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்
பெண்"

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இணையற்ற மொழிதான்— பேசப்படும் சைவமும் மிக மிகப் பழையதுதான். திருமுறைகளின் பெருமையோ சொல்லவரிதுதான். ஆனால், தமிழ் மகன் தமிழை மறந்தான். வடமொழியும், ஆங்கிலமும் முதலிய பிற மொழிகளின் உதவியின்றித் தமிழில் கலை ஞானங்களை அறிவிக்க முடியாதென்று சொல்லவும் சிலர் துணிந்து விட்டார்கள். தமிழ் நாட்டில் 'எல்லோரும் தமிழ் கற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறவும் அச்சமாக இருக்கிறது. சைவன் என்றால் சாதிச் சைவனை இடுகுறியாகக் குறிக்க நேர்ந்து விட்டது. சமயச் சைவனை எங்கு தேடினுங் காணோம். திருநீறுங்கண்டி கையுமாகிய சிவசாதனங்களை அணிவது அருகி வருகின்றது. இதனைப் போக்க வழி:-

தமிழில் பேசுவதும், எழுதுவதும், அதனைப் பயில்வதுமே நாது உரிமையும், கடமையும் என்ற எண்ணம் நம்முள் ஊறவேண்டும். இதுபற்றி நாம் வங்காளியரைப் பின் பற்றல் நலம் தரும். தமிழை வளருங்கள், அதனால் சைவம் வளரும். சைவத் தமிழ் இறைவனுக் காட்படுத்துந் தமிழாம். 'தமிழ் வளர்ப்போம்' என்று சொல்லி உயிர்களை உருவாக்காத முயற்சிகள் செய்வது பயனுடையதாகாது.

திரு முறைகள் ஏறக் குறைய 18090 திருப் பாட்டுக்களைக் கொண்டவை. நாள் ஒன்றுக்கு ஐம்பது பாட்டுக்கள் படித்து வரின் ஒரு ஆண்டில் முடிக்கலாம். எழுதாமறை என்னும் வேதங்களை இமயம் முதல் குமரி வரை ஒன்று போலவே நினைத்து ஓதுகின்றார்களே! நமது திருமுறைகளையும் [illegible] என் [illegible] வாறு ஓதிப் பயிலக் கூடாது? திருமுறை வளரத் தமிழுஞ் சைவமும் வளரும். திரு முறைகளை விழாக்களின் மூலமாக மட்டு மன்றி, அங்கங்கே ஓதச் செய்தும் எல்லும் வகையாற் பரப்பி, எல்லா மக்களையும் சைவம், சைவச் சரியையிற் றொடங்கி மக்களைப் பழகிவரச் செய்ய விதி செய்வோமானால், நமது சைவமும் தமிழும் எத்தனை விரைவில் ஓங்கி வளரும்! நம் கடமையை மறவாது புறச் சமயத்தார்கள் தங்கள் சமயங்களை நிலை நாட்டிப் பரப்புவதில் ஒருங்கு கூடுவதைப் பார்த்தாவது சிந்திக்க வேண்டாமா?

'வேந்தனு மோங்குக — எல்லாம் அரன் நாமமே சூழ்க, வையக முந்துயர் தீர்கவே'

'தமிழ் வண்டு'

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்
ELEPHANT KISAN
பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# இலக்கிய உலகில்.....நாம்!

'மூர்த்தி'

(முன் தொடர்ச்சி)

பின்னரும் அச்சு முதலிய யந்திரச் சாதனங்கள் ஏற்படாமையின் பயனாகப் பனை யோலையில் இலக்கியக் கலையை நிலை நாட்டிய தமிழர்க்கு, நீண்ட உரை நடையை வளர்ப்பது சலிப்பைத் தருவ தொன்றாகவே விளங்கிற்று. இத்தகைய வசதிக் குறைவுகளால்தான் 'சுருங்கக் கூறல்' என்பது தமிழிலக்கியத்தின் பத்து அழகுகளுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுகின்றது போலும்! அச்சு முதலான யந்திரங்கள் ஏற்பட்டதன் பயனாகவும், நாகரிக முயற்சியின் பயனாக விஞ்ஞான உணர்வு மிகுந்து அறிவுத் துறையில் மக்களது மன நிலை திரும்பியதன் காரணமாகவும், அரசியல் கொந்தளிப்பின் காரணமாக மக்களது வாழ்க்கை முறை ஆர்வத்தைக் காட்டத் தூண்டும் விளையாட்டாக இராது, ஆற்றலை வெளியிட முற்படும் போராட்டமாக மாறியதாலும், ஜன நாயக உணர்ச்சி பலித்ததன் பயனாகப் 'பரம்பரை வழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்னும் கருத்தற்ற நம்பிக்கை தளர்ந்து 'காலப் போக்கிற் கேற்ப சில சீர்திருத்தங்களைச் சமூகம் அடைய வேண்டும்' என்னும் சிந்தனை தலை தூக்கியதாலும், தற்போது தமிழ் இலக்கியத்தில் உரை நடை தலையாய இடம் பெற்றுள்ளது. உரை நடை நன்கு வளரத் தொடங்கியது வீரமா முனிவர் காலத்திலிருந்துதான். ஒரு நாட்டின் இலக்கிய வரலாற்றில் உணர்ச்சி மிகுந்த பாடல் ஓங்கும் காலமும் அறிவு மிகுந்த உரை நடை ஓங்கும் காலமும் அடுத்தடுத்து மாறி மாறி வரும் என்க. இக் கூற்றினை அளவு கோலாகக் கொண்டு, தமிழ் இலக்கியத்தினை ஆராயுமிடத்து, இன்றைய தமிழ் இலக்கிய உலகு 'அறிவுணர்ச்சி மிகுந்த உரை நடைக்காலம்' (The age of Prose and reason) என்பதன் பாற் பட்டதாக அமையும்.

இந்த உரை இலக்கியத்தின் கண்ணும் நாவல் எனப்படும் நவீனமும், சிறுகதையுந்தான் ஓங்கியுள்ளன. தற்காலத்து நவீனம் சிறப்படைவதற்குக் காரணம் அதன் தோற்றப் பருமை என்று மட்டுப் கூறுவதற்கில்லை; நவீனத்தை யொத்த ஆக்க இலக்கியமாகத் தற்போது எதுவும் திகழவில்லை. ஏழை, பணக்காரன், கற்றவன், கல்லாதவன், இளைஞன், முதியோன், அரசியல்வாதி, சமயாசாரியன் ஆகிய யாவரும் ஒருங்கே விழைந்து படிப்பது நாவலைத்தான். இதற்கு அடிப்படையான காரணம் கதை வடிவத்தில் இவை அமைந்திருத்தலே. தொன்று தொட்டு இலக்கியம் நம் நாட்டில் வளர்ந்து வந்த முறையினை ஆராயுமிடத்து, முதன் முதலில் ஏதோவொரு கருத்தினைத் தகுந்த யாப்புடன் பிணைத்துச் சொற்கோவைகளாக மக்களுக்கு வழங்குவதே இலக்கிய ஆசிரியர்களின் தொழிலாக இருந்து வந்தது. இலக்கியத்தின் பயனும் அதைத் துய்த்து இன்புறுதல் என்ற அளவோடு அக் காலத்து நின்றிருத்தல் வேண்டும். இவ்வாறான முறையில் அதாவது, கலை, கற்று இன்புறுதற்கே என்ற இலக்கியக் கொள்கை மலிந்திருந்த நிலையில் தோன்றிய இலக்கியங்களே பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்ற பண்டைத் தமிழ் நூல்களாம். பிறகு நாளடைவில் இலக்கியம் அல்லது கலை, படித்து இன்புறுவதற்கு மட்டுந்தானா? தோன்றி அழியக் கூடிய இன்ப உணர்ச்சி ஒழிய, நின்று நிலவக் கூடிய நெறியினை நெறி தவறிச் செல்லும் மக்களுக்கு அது புகட்டாதா? என்னும் எண்ணம் சமூகச் சான்றோர்களின் உள்ளத்தில் எழும்பியிருக்க வேண்டும். "வாழ்க்கை நெறியினை அறிவுறுத்துவதை இலக்கியம் தொழிலாகப் பூண வேண்டும்." என்ற அவர்களுடைய எண்ணத்தின் விளைவாகத்தான் பதினெண் கீழ்க்கணக்கு முதலான நீதி நூல்கள் தமிழ் நாட்டில் அரும்பின. திருக்குறள், நாலடியார் என்பன போன்ற ஒரு சில கீழ்க்கணக்கு நூல்கள் கவிதையுணர்ச்சி குன்றாத நிலையில் அறத்தைப் புகட்டினாலும், ஆசாரக் கோவை முதலான வேறுபல நீதி நூல்கள் கற்பனை, உணர்ச்சி அற்றனவாய் வெறும் சொல்லடுக்குகளாய் நின்று அறத்தினை மட்டும் வாழ்க்கையினின்றும் வெட்டிக் காட்டும் யந்திரங்களாக மாறிவிட்டன. நூலைப்பயிலும் மக்கள் நயமற்ற பாடல்களைக் கண்டு வெருளல் இயல்பு. இலக்கியமோ மக்களது பொதுவுடைமைப் பொருள். மக்களுடைய செல்வாக்கின்றி அது வாழ முடியாது.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)